பதக்கம், காந்தி பெயரால், மகாத்மா காந்தி பதக்கம் என்ற ஒரு பதக்கம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமாத்திரம் அல்ல, பத்தாயிரம் ரூபாயும் அவர்களுக்குப் பரிசாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மகாத்மா பதக்கத்தாலும், இந்தப் பத்தாயிரம் ரூபாயாலும் இந்த மாமூல் தொலைகிறதா என்று பார்ப்போம் என்று சொல்லி, இது பரிசீலனையில் இருக்கின்றது என்பதையும் எடுத்துக் கூறி, இந்தக் கவன ஈர்ப்பைக் கொண்டு வந்த எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் எடுத்துக் கூறிய கருத்துக்களின் அடிப்படையில், அரசு கள்ளச் சாராயத்தை ஒழிப்பதிலே தீவிர நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அறிவிப்பைக் கொடுத்த உறுப்பினர்கள் பட்டியலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்கள் பெயரையும் சேர்க்க வேண்டும்.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

(ஆ) மதுரை நடுவர்மன்ற நீதிபதிக்கும் கடையநல்லூர், சேரன்மகாதேவி காவல்துறை அலுவலர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலும், வழக்கறிஞர்கள் போராட்டமும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த சிறப்புக் கவன ஈர்ப்பு. மதுரை, குற்றவியல் நீதிபதிக்கும், தலைமைக் காவலருக்கும் இடையே ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து வழக்கறிஞர்கள் சங்கம் தொடர்ந்து போராட்டம் நடத்துவது குறித்து, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி.

டாக்டர் க. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை குற்றவியல் நீதிபதி திரு. ஆர். கே. சங்கரநாராயணன் அவர்களுக்கும், கடையநல்லூர் தலைமைக் காவலர் பழனிச்சாமிக்கும் இடையில், ஜூலை மாதம் 26-ஆம் தேதி நெல்லை அருகே பேருந்தில் நடந்த சிறு மோதலைத் தொடர்ந்து, நெல்லை மற்றும் மதுரை வழக்கறிஞர்கள் சங்கங்களின் தொடர் போராட்டம் பற்றி நான் தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, என்னுடைய சில கருத்துக்களை வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாகப் பேசுங்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நடவடிக்கை பற்றி ஏற்கெனவே தமிழக முதல்வர் அவர்கள் இந்த மாமன்றத்திலே அறிவித்திருக்கிறார்கள். அதற்குப் பின்னாலும், திருநெல்வேலியிலும் மதுரையிலும் வழக்கறிஞர்கள் போராட்டம் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. நான் சொல்ல விரும்புவது, பேருந்திலே தூண்டுதலுக்கு யார் காரணமானவர்கள் என்பதில் வித்தியாசமான தகவல் எனக்கு வந்திருக்கிறது. அதிலும் குறிப்பாக, தலைமைக் காவலர் பழனிச்சாமி அவர்கள் ** என்றும், குறிப்பாக ** என்றும் எனக்குத் தகவல் வந்திருக்கிறது. தமிழகத்திலே ** வேறுபாடுகள் இருந்தாலும்கூட, நெல்லை மாவட்டத்தில் மட்டும் சற்று வித்தியாசமாக இருக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும். மற்ற இடங்களிலெல்லாம் வேறுபாடுகள் இருக்கும். ஆனால், நெல்லை மாவட்டத்தில் 'ஆண்டகனிஸம்', அதாவது பகையுணர்வு இருக்கும். எனவே, பேருந்தில் போகக்கூடிய அந்த நீதிபதி அவர்களுக்கு இந்தக் காவலர் யார் என்பது நிச்சயமாகத் தெரிந்திருக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஏனென்றால், நெல்லை மாவட்டத்தில் அந்தப் பகுதிகள் சற்று வித்தியாசமான பகுதிகள். அப்படி இருக்கக்கூடிய சூழ்நிலையில் இதை ஒரு வித்தியாசமான கண்ணோட்டத்துடன் நாம் அணுகவேண்டும் என்ற கருத்தை நான் கூற விரும்புகிறேன். இதற்கு முன்னுதாரணமாக, 1972-லே நெல்லையிலே லூர்துநாதன் என்பவர் மரணம் அடைந்த காலகட்டம். அப்போது ** களுக்கும், போலீஸுக்கும் மோதல் வந்தது. அந்த மோதலின்போது, போலீஸ் துறையினர் ** களுடைய திருமண விழாவிலேபோய் தாக்கினார்கள். ** போலீஸ் தரப்பைத் தாக்கினார்கள். இதற்குப் பதிலாக, போலீஸ்காரர்கள் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டுமென்று, அப்போது நெல்லை மாவட்டத்தினுடைய போலீஸ் சூப்பிரன்டெண்டெண்ட்டாக இருந்த திரு. குருவைய்யா அவர்களிடத்திலே அனுமதி கேட்டார்கள். ஆனால் அவர்கள் அனுமதி கொடுக்க மறுத்தார்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இந்தப் பொருள் பற்றி சுருக்கமாகப் பேசவேண்டும். அதுதான் சிறப்புக் கவன ஈர்ப்பு.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் அனுமதி மறுக்கவும், காவலர்கள் துப்பாக்கியைக் கீழே வைத்துவிட்டு, இந்த எஸ்.பி.-ஐ. குருவைய்யா அவர்களுடைய ** இழிவுபடுத்தி அவர்கள் போராட்டம் நடத்திய வரலாறெல்லாம் உண்டு. அந்த அளவிற்கு நெல்லை மாவட்டம் பூராவும் ** உணர்வு இருக்கக் கூடிய ஒரு பகுதி. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இந்தக் காவல்துறை அதிகாரி அவர்களுக்கும், திரு. சங்கரநாராயணன் அவர்களுக்கும் இடையே நடந்த மோதல் வித்தியாசமாகப் போய்விடக்கூடாது.

மாஜிஸ்ட்ரேட் அவர்களுக்குப் போராடுவதற்கு வழக்கறிஞர்கள் சங்கம் இருக்கிறது. அதேசமயத்தில் படித்தவர்களும் இருக்கிறார்கள். ஆனால் இவர் ** என்ற காரணத்தினால், இவருக்குப் போராடுவதற்கு அங்கே சங்கங்களோ, படித்தவர்களோ இல்லை. *(குறுக்கீடுகள்)*

முற்பகல் 11.15

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் மூன்று பேரும் இப்படிப் பேசினீர்கள் என்றால் எப்படி ? *(குறுக்கீடு)*

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள், இங்கே நீதிபதி — மாஜிஸ்ட்ரேட் — அவர்களுக்கும், காவல் துறையினருக்கும் இடையிலே நடந்த சம்பவம் பற்றி, அதையொட்டி நடக்கிற வழக்கறிஞர்களுடைய போராட்டம் பற்றி, இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்து, அதை நீங்கள் இங்கே அனுமதித்திருக்கிறீர்கள். என்னுடைய கேள்வி, அவர் சொன்னமாதிரி திருநெல்வேலி மாவட்டத்திலே, ** வேறுபாடுகளோ, கருத்து வேறுபாடுகளோ எல்லாம் இருக்கலாம். ஆனால், இங்கே சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிற நாம், நடைபெற்ற நிகழ்ச்சிமீது, ** என்றெல்லாம் சொல்லி, மேலும் அவையெல்லாம் பதிவாகி, அவையெல்லாம் பத்திரிகையிலே வந்து, மேலும் இது ** தூண்டி,

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கலவரங்களைத் தூண்டுகிற விதத்திலே பேச்சுகள் அமையக் கூடாது என்பது என்னுடைய கருத்தாகும். எனவே, இந்தப் பிரச்சினையில் மோதல்கள் பற்றியெல்லாம் இருக்கட்டும்; ** பற்றிக் குறிப்பிட்டதையெல்லாம் தயவுசெய்து அவைக்குறிப்பிலே இருந்து, பத்திரிகைக் குறிப்பிலேயிருந்து நீக்கி, வழக்கறிஞர்களுடைய போராட்டத்தைத் திரும்பப் பெறுவதற்கு அரசு செய்கிற ஆலோசனைகளைப் பற்றிப் பேச வேண்டுமே தவிர, ** எல்லாம் பேச வேண்டாம் ; இந்தப் பிரச்சினையிலே வேண்டாம் என்பது என்னுடைய அபிப்பிராயம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கிருஷ்ணசாமி, கொஞ்சம் இருங்கள். நான் உங்களுக்கு அனுமதி கொடுத்ததே, வழக்கறிஞர்கள் எல்லாம் போராட்டம் நடத்தி, பொதுமக்களுக்கு ஒரு அமைதி இல்லாத சூழ்நிலை ஏற்படுத்துவது என்பது குறித்து சொல்வதற்குத்தான். இதிலே பாதிக்கப்பட்டவர்கள் என்ன ** என்பதைச் சொல்வதற்கா உங்களுக்குப் பேச அனுமதி கொடுத்தேன் ? நீங்கள் அந்தப் பிரச்சினையை விட்டுவிட்டு, இதைப் பற்றிப் பேசுங்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி : அது ** கலவரமாக . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த அதிகாரிகளை என்ன ** என்று சொன்னதை நான் அவைக் குறிப்பிலேயிருந்து எடுக்கிறேன். நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டசபையில் ** பற்றிப் பேசினால், வெளியிலே இருக்கிறவர்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நீங்கள் விடுங்கள். நான்தான் அதை எடுத்தாகிவிட்டதே ? (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். உறுப்பினர், நீங்கள் பேசுங்கள். வழக்கறிஞர்கள் தொடர்ந்து முதலமைச்சர் அறிவித்த பிறகும், போராட்டம் நடத்தி, அதனால் நீதிமன்றங்கள் செயல்படாமல் இருப்பதைப் பற்றித்தான் உங்களைப் பேச நான் அனுமதித்தேன்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி : என்னுடைய நோக்கம் முழுவதும், இது ** கலவரமாக . .

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1996 ஆகஸ்ட் 7

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இதிலே போய் ** பிரச்சினையைப் பேசுவது தப்பு. அப்படியென்றால், நான் அனுமதியே கொடுத்திருக்க மாட்டேன்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி : ** கலவரத்தைப் பற்றி இல்லை ; அங்கே இருக்கக்கூடிய நிலைமையைச் சுட்டிக்காட்ட வேண்டும். அங்கே திருநெல்வேலி மாவட்டம் என்பது வித்தியாசமானது. அங்கு அனுபவிப்பவர்களுக்குத்தான் தெரியும். வெளியிலே இருந்து பார்க்கக்கூடியவர்களுக்கு அது தெரியாது. பஸ்ஸிலே, டீ கடையிலே, பொது இடங்களிலே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் நீதிமன்றங்களைப் பற்றி பேசுங்கள். இல்லாவிட்டால் உட்காருங்கள். (குறுக்கீடு) முதலமைச்சர் அறிவித்த பிறகு, பல நாட்கள் நீதிமன்றங்கள் நடக்காமல், வழக்கறிஞர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதுபற்றிப் பேசிவிட்டு உட்காருங்கள், தயவுசெய்து.

டாக்டர் க. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பொறுத்தவரையில் நீதிபதி அவர்களுக்கு நடந்த அவமானத்தை நான் நிச்சயமாக ஏற்றுக் கொள்ளவில்லை. காவலர்களுடைய நடவடிக்கைகளை நான் அங்கீகரிக்கவில்லை. அதேசமயத்தில் ஒரு தண்டனை வழங்குகிறபோது, சமூகப் பார்வை இருக்க வேண்டும் என்பதைத்தான் நான் கேட்டுக் கொள்கிறேனே தவிர, வேறெதுவும் கிடையாது. (குறுக்கீடு)

திரு. பி.ஆர். சுந்தரம் : தலைவர் அவர்களே. . .

திரு. இ. கணேசன் : தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 26-7-1996 அன்று மதுரை மூன்றாவது நடுவர்மன்ற நீதிபதி திரு. சங்கரநாராயணனுக்கும், கடையநல்லூர் காவல்நிலைய தலைமைக் காவலர் பழனிச்சாமி மற்றும் சேரன்மகாதேவி காவல்நிலைய முதல்நிலைக் காவலர் முருகன் ஆகியோருக்கும் இடையே நடைபெற்ற தகராறு குறித்து இதே அவையில், 3-8-1996 அன்று விரிவாகப் பேசப்பட்டு, நானும் பதிலளித்து, எடுத்துள்ள நடவடிக்கை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

விவரங்களையும் அறிவித்திருக்கிறேன். இதுபோன்ற ஒரு சம்பவம் நடைபெற்றது குறித்து, வழக்கறிஞர்களிடமிருந்தோ அல்லது நடுவர் திரு. சங்கரநாராயணனிடமிருந்தோ அரசாங்கத்திற்கு எந்தவிதமான தகவலும் தரப்படாத நிலையில், இதுகுறித்து கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர் மதுரை வேலுசாமி அவர்களுக்கு, அவர்கள் அனுப்பியிருந்த அந்தப் புகார் மனுவை நானே கேட்டுப் பெற்று, அதற்கான பதிலை இதே அவையில் சொன்னதோடு, தவறு காவலர்கள்மீது இருந்ததோ, இல்லையோ, எதற்கும் பலிக்கடாவாக வேண்டியவர்கள் அவர்கள் என்ற முறையிலேயும், அந்தத் துறையினர் மேலும் கவனமாகப் பணியாற்ற வேண்டும் என்பதை அவர்களுக்கு அறிவிக்க வேண்டும் என்பதற்காகவும், வழக்கறிஞர்கள் விடுத்துள்ள கோரிக்கைக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதற்காகவும், அந்த இரண்டு காவலர்களையும் — தலைமைக் காவலர் மற்றும் முதல்நிலைக் காவலர் ஆகிய இருவரையும் — உடனடியாக தற்காலிகப் பணிநீக்கம் செய்ததோடு, அவர்களைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதன்படி அவர்கள் அன்றே கைது செய்யப்பட்டும் இருக்கிறார்கள்.

முற்பகல் 11-20

காவல் துறையின் தரப்பில், நீதிபதி பேருந்திலோ அல்லது பின்னர் காவல் நிலையத்திலோ அவர் தான் யார் என்பதைத் தெரிவித்திருந்தால் இத்தகைய நிகழ்ச்சிகள் நேர்ந்திருக்காது என்று தெரிவித்தபோதும்கூட, நான் அவர்களிடம் நீதிபதி என்பதற்காக மாத்திரமல்ல, பொதுமக்களிடம்கூட காவலர்கள் பணிவாக நடந்துகொள்வதுதான் நல்லது என்று கூறினேன். அதன் காரணமாக அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் அன்று நான் அவையிலே பதில் கூறும்போது இந்தச் சம்பவம் குறித்து நீதி விசாரணை மாவட்ட அளவிலான நீதிபதியைக் கொண்டு அல்ல, உயர்நீதிமன்ற அளவிலான ஒரு நீதிபதியைக் கொண்டு நீதி விசாரணை நிச்சயமாக நடத்தப்படும் என்று அறிவித்ததோடு அதைப்பற்றி உயர்நீதிமன்றத்திற்கு அனுமதி கேட்டு முறையாக எழுதப்பட்டுள்ளது. இதற்குப் பிறகும் வழக்கறிஞர்கள் தொடர்ந்து போராட்டத்திலே ஈடுபட்டு வருவதோடு சேரன்மகாதேவி இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர் ஆகியோர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மற்றொரு கோரிக்கையை வைத்தார்கள். இந்தக் கோரிக்கையையும் ஏற்று சேரன்மகாதேவி இன்ஸ்பெக்டர் காளையாப்பிள்ளை வேலூர் சரகத்திற்கும், சப்-இன்ஸ்பெக்டர் முகமது மைதீன் இராமநாதபுரம் மாவட்டத்திற்கும் மாற்றப்பட்டுள்ளார்கள். மேலும் இந்த இருவர்மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க காவல்துறை

இயக்குநர் ஆணை பிறப்பித்திருக்கிறார். அது மாத்திரமல்ல, இந்தச் சம்பவம் குறித்து ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு, அந்த வழக்கு விசாரணைகூட மாநில குற்றப் பிரிவிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. வழக்கு விசாரணையிலோ நீதிவிசாரணையிலோ உண்மைகள் தெரியவரும்போது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவும், இந்த அரசு தயாராக இருக்கிறது. இவ்வளவுக்குப் பிறகும் மீண்டும் ஒரு கோரிக்கை. தற்போது டி.எஸ்.பி. மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதைத்தான் அன்றைக்கு திரு. தாமரைக்கனி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். அவர் பேசினார் என்பதற்காக அதைத் தள்ளிவிடுவதிற்கில்லை. இப்படி தொடர்ந்து போலீசார் மீதே நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்தால் போலீசார், அவர்களுடைய கட்டுப்பாடு என்னாவது என்று கேட்டார்கள். நான் ஒரு அமைதி நிலவ வேண்டுமென்பதற்காக அவர்கள் வைத்த கோரிக்கைகளை எல்லாம் ஏற்று படிப்படியாக தற்காலிகப் பணி நீக்கம் செய்வது, கைது செய்வது, வழக்கு போடுவது, மாநிலக் குற்றப் பிரிவிற்கு மாற்றுவது என்று இவ்வளவும் செய்து, சப்-இன்ஸ்பெக்டரையும், இன்ஸ்பெக்டரையும் வேறு ஊர்களுக்கு வேறு மாவட்டங்களுக்கு மாற்றிய பிறகும் டி.எஸ்.பி. மீதும்—முதலிலே வைத்த கோரிக்கைகளில் இடம்பெறாத ஒன்று — டி.எஸ்.பி. மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். திருநெல்வேலி காவல்துறை கண்காணிப்பாளர் அவர்கள் தந்துள்ள தகவல்படி நீதிபதி திரு. சங்கரநாராயணனை காவல் நிலையத்திலே நல்ல முறையில் நடத்தினார்கள் என்றும், அவர் யார் என்று சொன்னதும் மரியாதையாக நடத்தினார்கள் என்றும் திருப்தியாக அவர் தெரிவித்திருக்கிறார். மேலும் இரண்டு தினங்கள் காவல் துறையின் ஜீப் ஒன்றைப் பயன்படுத்தி திருச்செந்தூர் கோவிலுக்கு அந்த நடுவர் திரு. சங்கரநாராயணன் போய்விட்டு வந்தார். இவ்வளவு சுமுகமாக நடந்து கொண்டவர் பின்னர் தன்னுடைய நிலையை ஏன் மாற்றிக் கொண்டார் என்று தெரியவில்லை என்றும் நெல்லை காவல்துறை கண்காணிப்பாளர் எங்களுக்கு இந்தத் தகவலைத் தந்திருக்கிறார். இந்தச் சூழ்நிலையிலே மதுரை, திருநெல்வேலி ஆகிய இரண்டு இடங்களிலே மாத்திரம் வழக்கறிஞர்கள் வேலை நிறுத்தத்தைத் தொடருவோம் என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு கதை உண்டு. ஒரு பாம்பு ஒரு சாமியார் இடத்திலே சென்று என்னைப் பார்த்தால் எல்லோரும் அடிக்கிறார்கள், பயப்படுகிறார்கள் என்ன செய்யலாம் என்று கேட்டது. சாமியார் சொன்னார் நீ யாரையும் கடிக்காமல் இரு, அடிக்க மாட்டார்கள் என்று சொன்னார்.

பாம்பு 10 நாள் கழித்து சாமியாரிடத்திலே உடம்பெல்லாம் புண்களோடு சென்றது. என்ன என்று கேட்டார் சாமியார். என்னை கண்டபடி அடிக்கிறார்கள். யாரையும் கடிக்காமல்தான் இருந்தேன் என்றது. 'நான் கடிக்காமல்தான் இருக்கச் சொன்னேன், படம் எடுத்துச் சீறாமலா இருக்கச் சொன்னேன்' என்று சாமியார் கேட்டார். இந்தக் கதையோடு இந்தத் தீர்மானத்திற்கான என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி.

(இ) சென்னைத் தொலைக்காட்சி நிறுவனப் புகைப்படக்காரரை அ.இ.அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தாக்கியது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த சிறப்புக் கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவையில் எழுப்ப அனுமதி கோரியுள்ளார், அவருக்கு அனுமதி அளிக்கிறேன்.

முற்பகல் 11-25

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் முன்னாள் அமைச்சர் டி.எம். செல்வகணபதி அவர்கள் போலீசாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அழைத்து வரப்பட்டபோது, அங்கே தங்களுடைய கடமையை ஆற்றிக்கொண்டிருந்த பத்திரிகைத்துறை நண்பர்களை, குறிப்பாக பிசினஸ் இந்தியா டி.வி. கேமராமேன் திரு. பாலசுந்தரம் அவர்களை செல்வகணபதி அவர்கள் சார்ந்துள்ள கட்சியைச் சேர்ந்தவர்கள், தரதரவென்று இழுத்துச்சென்று, கேமராவைப் பிடித்து இழுத்ததோடு மட்டுமல்லாமல் அங்கே இருந்த பத்திரிகைகாரர்களையும் தாக்கியிருக்கிறார்கள். தவறு செய்பவர்களுடைய கை இன்னும் ஓங்கிக் கொண்டே இருக்கிறது. அவர்கள் திருந்துவதாகத் தெரியவில்லை. இப்படி அநாகரீகம் நடந்து கொண்டிருப்பது சரியல்ல. இது சம்பந்தமாக பத்திரிகையாளர் சங்கத்தைச் சார்ந்தவர்கள் ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்துப் புகார் கொடுத்திருக்கிறார்கள். இப்போது காலம் மாறியிருக்கிறது. இருந்தாலும்கூட, பத்திரிகைத் துறையைச் சார்ந்த நண்பர்களுக்கும், மற்றவர்களுக்கும் இன்னும் சரியான பாதுகாப்பு இல்லை. ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் அப்படி நடந்துகொணடதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. தற்போதைய ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு போலீசார் தக்க நடவடிக்கை எடுத்து, பத்திரிகைத் துறையைச் சார்ந்தவர்களுக்கும், பொதுமக்களுக்கும் தக்க பாதுகாப்பு